www.Padasalai.Net www.CBSEtips.in

V12T

விருதுநகர் மாவட்டம்
இரண்டாம் இடைப் பருவத் தேர்வு - 2023

வகுப்பு 12
பொதுத்தமிழ்

கால அளவு: 1.30 மணிநேரம் மதிப்பெண்கள்: 50

பகுதி - I

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 8×1=8

1) ஏழ் ஆண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ்கழல் மன்னற்குக் காட்டல் ... தொடர்களில் வெளிப்படும் செய்திகள்
   1) மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள்
   2) ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்
   அ) 1 சரி 2 தவறு ஆ) 1 தவறு 2 தவறு இ) 1 சரி 2 சரி ஈ) 1 தவறு 2 சரி
2) வேறுபட்டதைக் குறிப்பிடுக.
   அ) அண்மைக் காட்சித் துணிப்பு ஆ) காட்சி மறைவு
   இ) சேய்மைக் காட்சித் துணிப்பு ஈ) நடுக்காட்சித் துணிப்பு
3) ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தன் உரையில் குறிப்பிட்டவர்.
   அ) இளம்பூரணர் ஆ) ஆறுமுகநாவலர்
   இ) மயிலைநாதர் ஈ) சிவஞானமுனிவர்
4) தொன்மம் பற்றிய கூற்றுகளுள் தவறான ஒன்றைத் தேர்க.
   அ) உருவாக்கப்பட்டு இறுகி விட்ட வடிவங்கள்
   ஆ) பழங்கதையைக் கொண்டு கருத்தை விளக்குவது
   இ) நம்ப முடியாதது போல் தோன்றும் நிகழ்ச்சிகள், செய்திகள்
   ஈ) விளங்காத கருத்துக்களைப் பழமொழியின் மூலம் விளக்குவது
5) யானை புக்க புலம்போல - இவ்உவமைக்குப் பொருத்தமான தொடர்
   அ) தனக்கும் பயன்படும், பிறருக்கும் பயன்படும்
   ஆ) பிறருக்குப் பயன்படும், தனக்குப் பயன்படாது
   இ) தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது
   ஈ) தனக்குப் பயன்படும், பிறருக்குப் பயன்படாது
6) அற்றம் என்பதன் பொருள்
   அ) அறிவுடையவர் ஆ) அழிவு இ) அரண் ஈ) உலகம்
7) எனது சுயசரிதை என்ற நூலின் ஆசிரியர்
   அ) பாலச்சந்திரன் சுள்ளிக்காடு ஆ) கே.வி.சைலஜா
   இ) அஜயன் பாலா ஈ) சிவாஜி கணேசன்
8) காய்நெல் - இலக்கணக் குறிப்பு
   அ) பண்புத் தொகை ஆ) பெயரெச்சம் இ) வினைத்தொகை ஈ) தொழிற்பெயர்

பகுதி - II

பிரிவு - 1 2×2=4

9) எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?
10) ஒருமுக எழினி, பொருமுக எழினி - குறிப்பு எழுதுக.
11) செவியறிவுறூஉ துறையை விளக்குக.

பிரிவு - 2 2×2=4

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.

12) எந்த ஒரு பொருளைப் பயன்படுத்தும் போதும் அதற்குப் பின்னால் உள்ள மனிதர்களின் உழைப்பை நாம் சிந்திப்பதில்லை
    ஒரு தேநீரைப் பருகும்போது அதற்குப் பின்னால் உள்ள மனித உழைப்பைச் சிந்தித்து உங்கள் கருத்தை எழுதுக.
13) திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.
14) பாவிகம் - விளக்குக.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**பிரிவு - 3** **3×2=6**

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

15) கீழ்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக.
திரை, காண், கைதட்டல், மக்கள்

16) பொருள்வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க.
வலம், வளம்

17) தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.
பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்.

18) Teller- என்பதன் தமிழாக்கம்

**பகுதி - III**

**பிரிவு - 1** **1×4=4**

**எவையேனும் ஒன்றனுக்கு விடை தருக.**

19) நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

20) யானை புக்க புலம்போல தானும் உண்ணான் உலகமும் கெடுமே உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக.

**பிரிவு - 2** **1×4=4**

**எவையேனும் ஒன்றனுக்கு விடை தருக.**

21) திரைபடத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.

22) வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

**பிரிவு - 3** **1×4=4**

**எவையேனும் ஒன்றனுக்கு விடை தருக.**

23) அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க இகல்வேந்தர் சேர்ந்து ஒழுகுவார் - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

**(அல்லது)**

சொற்பொருள்பின்வரும் நிலையணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**பகுதி - IV** **2×6=12**

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

24) அ) திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியம் நிறுவுக.

**(அல்லது)**

ஆ) எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாக பிரதிபலிக்கின்றன - நிறுவுக.

25) அ) மகா நடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

**(அல்லது)**

ஆ) நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**பகுதி - V** **1×4=4**

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.**

26) 'காய்நெல் அறுத்து' - எனத் தொடங்கும் பிசிராந்தையாரின் புறநானூற்றுப் பாடல்.

- - - - - - - -

Kindly send me your study materials to padasalai.net@gmail.com